விலை: சதம் 75 ★ ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஐப்பசி 8 ஜுல்ஹஜ் 25 இதழ் 252
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 24-10-1981

### கணவனும் மனைவியும் துப்பாக்கியைப்பறித்தனராம்

# கொள்ளைக்கு வந்தவர்கள்

## கத்தியால் குத்திவிட்டு மறைவு

### இருவர் ஆஸ்பத்திரியில் அனுமதி

(கோண்டாவில்)
வீடொன்றில் துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்க முயன்ற இளைஞர் கோஷ்டி ஒன்று வீட்டுச் சொந்தக்காரரும் அவரது மனைவியும் துப்பாக்கியைப் பறித்துக் கொண்டதை அடுத்து கணவரையும், அங்கிருந்த மற்றொருவரையும் கத்தியால் குத்திக் காயப்படுத்திவிட்டு தப்பி ஓடிவிட்டனர்.

இச்சம்பவம் நாச்சிமார் கோயிலுக்கு அண்மையில் உள்ள இல்லத்தில் நேற்றுமுன் தினம் இரவு இடம்பெற்றது.

இச்சம்பவம் பற்றி மேலும் கூறப்படுவதாவது:

சைக்கிளில் குறிப்பிட்ட இல்லத்திற்கு வந்த மூவர் வீட்டுக்காரரைத் தாக்க முற்பட்ட போது அவர் துப்பாக்கியைப் பறித்துக் கொண்டனராம்.

அடுத்து வந்தவர்களில் ஒருவர் வீட்டுக்காரரையும் அங்கிருந்தவரையும் கத்தியால் குத்திவிட்டு மூவரும் ஓடினராம்.

சைக்கிளில் வந்த மூவரும் முதலில் முதலாளி என்று கூப்

(6-ம் பக்கம் பார்க்க)

### ★ கிளிநொச்சி மக்கள் வங்கிக் கொள்ளை:

# நகைகளின் பெறுமதி

# நான்கு கோடி ரூபாவாம்!

(கிளிநொச்சி)

**கிளிநொச்சி வங்கியில் கொள்ளையடிக்கப்பட்ட நகைகளின் பெறுமதி 4 கோடி ரூபா என்று பூர்வாங்க மதிப்பீடுகளில் இருந்து கணக்கிடப்பட்டுள்ளது.**

கொள்ளையடிக்கப்பட்ட நகைகள் இன்னமும் உத்தியோக பூர்வமாகக் கணக்கிடப்படவில்லை. என்று பொலிசார் தெரிவித்தனர். இதேவேளையில் இவற்றைக் கணக்கிடுவதில் வங்கி உயர் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க கொள்ளையடிக்கப்பட்ட வங்கியின் முன் கண்டெடுக்கப்பட்ட ரேப்-ரேடியோவில் தடை செய்யப்பட்ட இயக்கம் பற்றிய தகவல்கள் சில இருப்பதாக பொலிசார் தெரிவித்தனர்.

இதுஇவ்வாறிருக்க வங்கி உதவி முகாமையாளர் பொலிசாருக்கு தெரிவித்த தகவலில் அதிகாலை 2மணியளவில் தமது வீட்டு மதில்மேலால் ஏறிவிழுந்து உள்ளே வந்தவர்கள் பொலிசில் இருந்து வந்ததாகக் கூறி வங்கித் திறப்பைக் கேட்டதாகவும் தாம் மறுக்கவே அவர்கள் தாங்களாகவே தமது வீட்டிலிருந்த வங்கித் திறப்புக்களை எடுத்துக்கொண்டு தம்மையும் அழைத்துக் கொண்டு வங்கிக்குச்சென்று கொள்ளையடித்ததாகவும் தெரிவித்துள்ளார்.

#### புலி இயக்கம் . . .

தாம் புலி இயக்கத்தை சேர்ந்தவர்கள் என்றும், கரைச்சல் தராது திறப்புக்களைத் தருமாறு தம்மிடம் இளைஞர்கள் கேட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

#### காசாளர் தகவல்

தமது வீட்டுக்கு வந்த மூவரில் ஒருவர் உள்ளேவந்து வங்கித் திறப்பைக்கேட்டதும். தாம் திறப்பு தம்மிடம் இல்லை என்று கூறிய போதுதுப்பாக்கி முனையில் பயமுறுத்தி திறப்பைப் பெற்றுக்கொண்ட அந்த இளைஞர்கள் ஒரு மணித்தியாலம் எந்த முயற்சியிலும் ஈடுபட வேண்டாம் என்றும் வெளியே ஆட்கள் காவல் இருக்கிறார்கள் என்று கூறிவிட்டு திறப்புக்களுடன் சென்றனர் என்றும்காசாளர்செல்வி கந்தையா பொலிசாரிடம்தெரிவித்தார் நாமும் தமிழர்தான் நீங்களும் தமிழர் தான் பேசாமல திறப்பைத்தாருங்கள் என அவர்கள் தம்மிடம் கேட்டனர் என்றும் செல்வி கந்தையா தெரிவித்தார். (க)

### பொலிஸ் மாஅதிபர் கிளிநொச்சி வந்துதிரும்பினர்

(கிளிநொச்சி)
கிளிநொச்சி மக்கள் வங்கிக் கொள்ளையை அடுத்து பொலிஸ் மா அதிபர் திரு. அனுசெனவிரத்ன நேற்று கிளிநொச்சிக்கு வந்து கொள்ளையடிக்கப்பட்ட வங்கியைப் பார்வையிட்டதுடன் பொலிஸ் உயர் அதிகாரிகளுடன் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த மகாநாடு ஒன்றையும் நடத்தினர்.

### குற்றவாளிகளைக்கண்டுபிடிக்க

## மக்களின் ஒத்துழைப்பை கோருகிறார் அரசஅதிபர்

அரசாங்க அதிபர் திரு. நேசையா விடுத்துள்ள அறிக்கையில கூறியிருப்பதாவது:

"கிளிநொச்சியில் இடம்பெற்ற மக்கள் வங்கிக் கொள்ளை அண்மைக் காலங்களில் யாழ்ப்பாண மாவட்டத்தில் வரிசைக்கிரமத்தில் இடம் பெற்றுவரும் பாரதூரமான கொலை கொள்ளைக் குற்றங்களில் ஒன்றாகும். இவ்வாறான குற்றங்கள் மிகவும் கொடூரமானதாக அடுத்தடுத்து இடம் பெறுகின்றன. யாழ்ப்பாண மாவட்ட மக்களும் சட்டத்தினையும் ஒழுங்கினையும் நிலைநாட்டுபவர்களும் ஒருங்கிணைந்து குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதிலும் இவ்வாறான குற்றங்கள் ஏற்படாத வண்ணம் தடுப்பதிலும் கூடிய கவனம் செலுத்தாவிடிற் தொடர்ந்து உயிர்ச் சேதமும் பொருள் நட்டமும் ஏற்படக் கூடிய சூழ்நிலை உருவாகும். இவை சம்பந்தமான தகவல்களைப் பொது மக்களின் உதவியுடன் பெற்று உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்கும் வண்ணம்

(6ம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியை வளைத்து ஆயுதப்படை முற்றுகை!

### கொள்ளையர் எந்நேரமும் சிக்கலாம்

(கிளிநொச்சி)
கிளிநொச்சி மக்கள் வங்கியில் கொள்ளையடித்தவர்கள் கிளிநொச்சியைவிட்டு வெளியேறாவண்ணம் இராணுவ-பொலிஸ் படையினர் கிளிநொச்சியைச் சுற்றிவளைத்துள்ளனர். எந்நேரமும் கொள்ளையர் தமது வலையில் அகப்படலாம் என பொலிசார் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

#### பதட்ட நிலை

இதேவேளையில் கிளிநொச்சியில் பதட்ட நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் நடமாட்டம் மிகவும் குறைந்து காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## கொலையென தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ். நகரில் சென்ற 15-ந் திகதி ராணுவத்தின்மீது நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில உயிரிழந்தவர்களின் மூவரின் மரணம் கொலை என யாழ். நீதவான் திரு.ரி. ஜோநாதன் தீர்ப்பளித்துள்ளார். (மா)

## சமூகவிரோத சக்திகள்

(யாழ்ப்பாணம்)
பொதுமக்கள் கூடும் இடங்களில் பயபீதியை ஏற்படுத்தி கொள்ளையடிப்பதில் சில சமூகவிரோத சக்திகள் ஈடுபட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

யாழ் நகரில் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு நடைபாதை வியாபாரிகள் இருக்கும் இடங்களில் சனக்கூட்டம் நிரம்பிவழிந்து கொண்டிருக்கிறது.

இச்சந்தர்ப்பத்தில் இராணுவத்தினர் அடிக்கின்றனர் என்று சொல்லியவாறு ஓடிவரும் இவர்கள் வியாபாரிகளினதும் பொதுமக்களினதும் ஆங்காங்கே விட்டுச்செல்லப்படும் பொருட்களைச் சுருட்டிக் கொண்டு தப்பி ஓடுகின்றனராம். (மா)

## ஆயுள்வேதஆஸ்பத்திரிகளில் மருந்துகள் இல்லை

### மாவட்டசபைத் தலைவருக்குப் புகார்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி சபையில் பராமரிக்கப்பட்டுவரும், சித்த ஆயுர்வேத வைத்தியசாலைகளில், சித்த மருந்துகள் எதையும் நாம் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. பல சித்த மருத்துவர்கள் இதுபற்றித் தங்களுக்கு வேண்டுகோள் விடுத்தும், இன்னும் மருந்துகள் கிடைக்கவில்லை. இவ்வாறு நெற்கொழு கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் யாழ். அபிவிருத்திச் சபைத் தலைவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தனது கடிதத்தில்; "பாரம்பரிய சித்த வைத்தியக் கலையை அபிவிருத்தி செய்யவேண்டியது அபிவிருத்திச் சபையின் முக்கிய கடமையாகும். ஆனால் இதுவரை ஏழை நோயாளர்களுக்கு சித்த மருந்துகள் பெற்றுக்கொள்வதற்கு அபிவிருத்தி சபை எதுவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை. கிராம சபைகளின் ஆட்சிக் காலத்தில் பெற்றுக்கொள்ள வசதியாக இருந்தும் நமது பாரம்பரிய சித்த மருந்துகள் கடந்த சில காலங்களாக கிடைக்காதமையால் பல சமூக முன்னேற்றக் கழகங்கள், இது பற்றி விசேட ஆணையாளருக்கு பலமுறை வேண்டுகோள் விடுத்தும் எதுவித நடவடிக்கையும் எடுபட்டதாகத் தெரியவில்லை.

சித்த மருந்துகளை யாழ். மாவட்ட சித்த ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு ஏழை நோயாளர்

(6-ம் பக்கம் பார்க்க)

### ★ யாழ். வன்செயல் நஷ்டஈடு விசாரணை:

# நவம்பர்மாதத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்படும்

## விசாரணை ஆரம்பமானது

### லயனல் பெர்ணாண்டோ தகவல்

(யாழ்ப்பாணம்)
"யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் 1981 மே 30-ம் திகதி தொடக்கம் ஜூன் 2-ம் திகதிவரையில் இடம்பெற்ற நிகழ்வுகளுக்காக நஷ்டஈட்டு விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இவ் விண்ணப்பப்படிவங்களில் 53 படிவங்கள் பூர்த்திசெய்யப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளன".

யாழ். வன்செயல் நஷ்டஈட்டு விசாரணைக்குழுவின் தலைவர் திரு. லயனல் பெர்ணாண்டோ நேற்று யாழ். செயலகத்தில் நடாத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில் மேற்படி விபரத்தைத் தெரிவித்தார்.

இம்மகாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

"இவ்விசாரணைக் குழுவின் முன்னிலையில் நேற்று 13 பேர் விசாரணைக் குட்படுத்தப்பட்டனர். இன்று 9 பேர் விசாரணைக் குட்படுத்தப்படவுள்ளனர்.

"நஷ்டஈட்டு விசாரணைக் குழு ஞாயிற்றுக்கிழமைகளிலும் விசாரணையைமேற்கொள்ளும். 1981 செப்டம்பர் 9-ம் திகதி முதல் டிசம்பர் 9-ம் திகதி வரையிலான மூன்று மாத காலத்திற்குள் நஷ்டஈடு தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கைசமர்ப்பிக்கவேண்டுமென இவ்விசாரணைக் குழுவை அரசாங்கம் பணித்துள்ளது.

"யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்டவர்களின் விண்ணப்பங்கள் மாத்திரமே பரிசீலனை செய்யப்பட்டு நஷ்டஈடு வழங்கப்படும்'' என்றார்

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் மே மாதம் 30ம் திகதி முதல் ஜூன் 2ம் திகதிக்குட்பட்ட காலப்பகுதியில் நடைபெற்ற

(6-ம் பக்கம் பார்க்க)

**JAFFNA COLLEGE TECHNICAL INSTITUTE**

Courses in (i) Welding
(ii) Advanced Welding
commence on 1st. November, 1981.
Application forms are available at the office.

Director,
Jaffna College Technical Institute,
Vaddukoddai.

1288



## சன்லைட் றைகிளீனேர்ஸ் வாடிக்கையாளர்கட்கு

தீபாவளியை முன்னிட்டு எங்கள் ஸ்தாபனத்தில் உடைகள் அதிகம் சேர்ந்திருப்பதால் எம்மிடம் றைக்கிளீனுக்காக தந்த காலதாமதமான உடைகளை தயவுசெய்து 30-10-81க்கு முன்னர் பெற்றுச்செல்லுமாறு வேண்டுகின்றோம். வேலை நேரம்: 8-30 -- 6-30

இங்ஙனம்
முகாமையாளர்

1290



## தீபாவளி மலிவு விற்பனை!

27-10-81 வரை

சகல துல்டெக்ஸ் புடவை வகைகளுக்கும் 10% கழிவுண்டு

இன்றே விஜயம் செய்யுங்கள்

துல்கிரிய நெசவாலையின்
யாழ். விற்பனை நிலயம்

# லேடன்காமென்ஸ்

86, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 330 (1275)



## இப்போது

# அக்ரோக்சோன்

## களைநாசினி போத்தல் லேபல் நிறங்கள்

## மஞ்சளும் ஊதாவும்




அக்ரோக்சோன் முந்திய பச்சை நிற போத்தல் லேபலுடன் இப்போது வருவதில்லை. இப்போது அந்த லேபல் மஞ்சள்-ஊதா நிறங்களில் அச்சிடப்படுகிறது. ஆனால் பொருளின் தரத்தில் எந்தவித மாற்றமும் கிடையாது.

சக்தி வாய்ந்த அக்ரோக்சோன் களைநாசினியை நெல் வயல்களில் வழக்கம் போல் பாவியுங்கள்.

**விவசாயிகள் நம்பிப் பாவிக்கும் வீறு மிக்க களைநாசினி அக்ரோக்சோன்**

CIC கெமிக்கல் இன்டஸ்ட்றீஸ் (கொழும்பு) லிமிட்டெட்
த. பெ. எண் 352,
கொழும்பு.
தொலைபேசி: 28421-5

நிகர கொள்ளளவு 450 மி. லீ. சில்லறை விலை ரூபா 30-60
" " 4 5 லீட்டர் " ரூபா 256-15


## கேள்விப் பத்திரம்

உள்ளூராட்சி, வீடமைப்பு
நிர்மாணத்துறை
அமைச்சின்

### கட்டடத் திணைக்களம்

சிறு ஏற்றுமதிப் பயிர்கள் திணைக்களத்துக்கு கம்மறுவலில் ஏலக்காய் உற்பத்திப் பிரிவொன்று அமைப்பதற்கான கேள்விகள் கொழும்பு-1 இலுள்ள கட்டடத் திணைக்கள கேள்விச்சபையின் தலைவரால் 4-11-1981 புதன்கிழமை காலை 10-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

02. கொழும்பு கோட்டையிலுள்ள கட்டடத் திணைக்களத்திலோ, இதர இடங்களிலுள்ள கச்சேரிகளிலோ கேள்விக்கட்டணமாக ரூபா 250/- செலுத்திய பற்றுச் சீட்டுடன் இத் திணைக்களத்தில் ரூபா 600,000/-க்கும் குறையாத பதிவு பெற்றுள்ள ஒப்பந்தகாரர் அல்லது 'தகுதிகாண்' சுடிதம் வைத்திருப்போர் 30-10-1981ம் திகதி பிற்பகல் 4-15 மணிக்கு முன் மாத்தளை கட்டடத்திணைக்கள மாவட்ட பொறியியலாளரிடமிருந்து கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

03 வேண்டிய இதர விபரங்களை மேற்படி பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

என். சிவபாதசுந்தரம்
கட்டடத் திணைக்களப் பணிப்பாளருக்காக
கட்டடத் திணைக்களம்,
கொழும்பு-1
1981-10-20 1287

### கல்வி

இதுவரை காலமும் எதிர்பார்த்த பொறியியல் கல்வி நிலையம் அச்சுவேலியில் 31-10-81ல் ஆரம்பமாகிறது. இது J.E.C ஸ்தாபனத்துடன் ஒன்றிணைந்து 3 11 81 தொடக்கம் மின்பொறியியல், எஞ்ஜினியரிங், கணிதம், தொழில்துறை இரசாயனம் ஆகிய கலைகளை இழமை நாட்களில் நடத்தும் உடனடியாக தொடர்பு கொள்க; J. E. C, சாந்தி தியேட்டர் அருகாமை, யாழ்ப்பாணம். 1289

## கேள்விப் பத்திரம்

உள்ளூராட்சி, வீடமைப்பு
நிர்மாணத்துறை
அமைச்சின்

### கட்டடத் திணைக்களம்

மாத்தளை கனிட்ட தொழில்நுட்ப நிலையத்தில் வகுப்பறைத் தொகுதியொன்று அமைப்பதற்கான கேள்விகள் கொழும்பு-1 இலுள்ள கட்டடத் திணைக்கள கேள்விச்சபையின் தலைவரால் 4-11-1981 புதன்கிழமை காலை 10-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

02. கொழும்பு கோட்டையிலுள்ள கட்டடத் திணைக்களத்திலோ இதர இடங்களிலுள்ள கச்சேரிகளிலோ கேள்விக் கட்டணமாக ரூபா 250/- செலுத்திய பற்றுச் சீட்டுடன் இத் திணைக்களத்தில் ரூபா 3,50,000/-க்கும் குறையாத பதிவுபெற்றுள்ள ஒப்பந்தகாரர் அல்லது "தகுதிகாண்" சுடிதம் வைத்திருப்போர் 30-10-1981ம் திகதி பிற்பகல் 4-15 மணிக்கு முன் மாத்தளை கட்டடத் திணைக்கள மாவட்ட பொறியியலாளரிடமிருந்து கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

03. வேண்டிய இதர விபரங்களை மேற்படி பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

என். சிவபாதசுந்தரம்
கட்டடத் திணைக்களப் பணிப்பாளருக்காக
கட்டடத் திணைக்களம்,
கொழும்பு-1
1981-10-20 1285

## கேள்விப் பத்திரம்

உள்ளூராட்சி வீடமைப்பு,
நிர்மாணத்துறை
அமைச்சின்

### கட்டடத் திணைக்களம்

மாத்தளை கனிட்ட தொழில்நுட்ப நிலையத்தில் வேலைத்தலமொன்று அமைப்பதற்கான கேள்விகள் கொழும்பு-1 இலுள்ள கட்டடத் திணைக்கள கேள்விச்சபையின் தலைவரால் 4-11-1981 புதன்கிழமை காலை 10-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

02. கொழும்பு கோட்டையிலுள்ள கட்டடத் திணைக்களத்திலோ, இதர இடங்களிலுள்ள கச்சேரிகளிலோ கேள்விக்கட்டணமாக ரூபா 250/- செலுத்திய பற்றுச் சீட்டுடன் இத் திணைக்களத்தில் ரூபா 325000/-க்கும் குறையாத பதிவு பெற்றுள்ள ஒப்பந்தகாரர் அல்லது 'தகுதிகாண்' சுடிதம் வைத்திருப்போர் 30 10-1981ம் திகதி பிற்பகல் 4-15 மணிக்கு முன் மாத்தளை கட்டடத் திணைக்கள மாவட்ட பொறியியலாளரிடமிருந்து கேள்விப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

03 வேண்டிய இதர விபரங்களை மேற்படி பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

என். சிவபாதசுந்தரம்
கட்டடத் திணைக்களப் பணிப்பாளருக்காக
கட்டடத் திணைக்களம்,
கொழும்பு 1.
1981-10-20 1286

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

7மாதம் நிரம்பிய அல்சேசன் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு. 24, 25ம் திகதிகளில் நேரில் பார்வையிடலாம். செ. அகிலானந்தன், மிருக வைத்திய அதிகாரி, சாவகச்சேரி. 1278

மூனிவரன் வீதியில் 1½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு விபரம்: 41, மூனிவரன் வீதி யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். 1283

சகல வசதிகளுடன் கூடிய புதிய வீட்டுடன் இரண்டரைப் பரப்பு காணி தும்பளை பிரதான வீதியில் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்க: க. சந்திரமோகன், புலோலி கிழக்கு, தும்பளை வீதி, பருத்தித்துறை. 1198

### தேவை

அரசாங்க திணைக்களத்தில் வேலை செய்யும் ஆடவருக்கு வசதியுள்ள அறை தேவை. நல்லூர் சுற்றுடல் விரும்பத்தக்கது. உடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல 1280. C/O ஈழநாடு லிமிட்டெட் யாழ்ப்பாணம். 1280

## கல்விச் சீர்திருத்த கருத்தரங்கு

(உடுப்பிட்டி)

"கல்விச் சீர்திருத்தம்" என்னும் விடயம்பற்றிய கருத்தரங்கு ஒன்று இம்மாதம் 31ம் திகதி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலுள்ள உடுப்பிட்டி கல்விவள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

உடுப்பிட்டிக் கல்வி வட்டாரப் பாடசாலை அதிபர்கள் கலந்துகொள்ளும் இக்கருத்தரங்கு வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வ. க. ஈசுரநாதம் தலைமையில் நடைபெறும்.

இக்கருத்தரங்கிற்கான ஒழுங்குகளை கல்விவள நிலையப் பொறுப்பதிகாரி திரு. வீ. நடேசு மேற்கொண்டுள்ளார்.

## உலக உணவுதினம் கொண்டாடப்பட்டது

(புலோலி)

வல்வெட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையில் உலக உணவுதினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

பாடசாலை அதிபர் திரு சி. கணேசமூர்த்தி தலைமையில் பாடசாலை அபிவிருத்திச்சபையின் ஒத்துழைப்புடன் நடைபெற்ற இவ் உலக உணவு தினத்திலே மாணவர் வீட்டுத் தோட்ட ஆரம்பமும் பயன் தருமரங்கள் நாட்டும் நிகழ்ச்சியும் இடம்பெற்றன.

## கண்ணதாசன் மறைவு தமிழ்மக்களுக்கு பெரும் இழப்பு

[யாழ்ப்பாணம்]

"கவிஞர் கண்ணதாசனின் மறைவு தமிழ் மக்களுக்கு ஈடு செய்ய முடியாத பெரும் இழப்பாகும். அவர் எழுதிய கவிதைகள், கட்டுரைகள், கதைகள் காலத்தால் அழியாது தமிழ்மக்களின் உள்ளங்களில் எல்லாம் நிலைத்திருக்கக் கூடியன."

மேற்கண்டவாறு உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்க இலங்கைக் கிளை செயலாளர் திரு செ. பரமநாதன் தமிழ்நாடு ஆஸ்தான கவிஞர் கண்ணதாசனின் மறைவு குறித்து வெளியிட்ட அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

[வெ]

**மணிவாக்கு**

உழைப்பாளி அவமானப்படத் தேவையில்லை;

— பைபிள்

# நமது நோக்கு

## மகாராணியின் 'மகா வாக்கியம்'

ஜனநாயகம் ஆண்டவனைப் போல அடிமுடி அறியமுடியாத பொருள்! அது ஒரு அரசியல் வாழ்க்கை முறை மட்டுமல்ல கொள்கை என்பதையே நம்மிற் பலர் கருத்தி கொள்வது; ஆனால் உலகில் ஒரு சிறந்த தத்துவமுறையென நும் கொள்ள ஆராய்ச்சி வழிகாட்டுகிறது

இந்த அடிப்படைக்கருத்துக்கு ஒளி ஊட்டும் பணியில் அமைந்ததே மாட்சிமை தாங்கிய இரண்டாவது மகாராணி எலிஜபெத் கொழும்பு காலிமுகத் திடலில் ஆற்றிய பேருரை "ஒரு நாட்டின் ஜனநாயகம் பெயரளவில் ஏற்கக்கூடியதல்ல; அது போற்றி வளர்த்துப் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியது".

இதுவே மகாராணியின் பேச்சின் உயிர்நிலையெனல் வேண்டும். 'போற்றி' என்ற பதம் அது ஒரு ஆன்மீக தத்துவம் என்பதைச் சுட்டுகிறது; தனிமனிதனின் சுதந்திரம் என்றும் மனிதன் யார்? என்ற கேள்வியை உள்ளடக்குகிறது. இதனை விளக்கவோ விரிக்கவோ இங்கு தேவையில்லை.

வளர்த்துப்பேணி பாதுகாக்கப்படவேண்டுமென்று எல்லாமாக மூன்று வினையெச்சங்கள் சமநிலையாகவும் கட்டளை பாதுகாப்பைப் பற்றியதாகும்.

எனவே மெய்வீகமான ஒரு தத்துவத்திற்கு ஆபத்து என்றும் உண்டென்பதும், அது வளர்ச்சி குன்றிப்போகாமலும், காலத்துக்குக் காலம் ஏற்படும் இடர்களிலிருந்து பாதுகாக்கப்படவேண்டுமென்பதும் இங்கு இந்த விழாவிற்குப் பொருத்தமான கூற்றாக ஒலிக்கப்பட்டிருக்கிறது.

ஜனநாயகத்தின் பேரில் நடந்த நடைபெறும் நடக்கவிருக்கும் ஆபத்துக்கள் அத்தனையும் அனுபவரீதியிலும் உணர்வாலும் இரங்கக்கூடிய போற்றல் உடையவரே பிரிட்டிஷ் மகாராணி இரண்டாம் எலிசபெத் அவர்கள்!

இந்த வேண்டுகோள் எச்சரிக்கை நிறைந்த தொனியில் இளைஞர்களுக்கே விடப்பட்டிருக்கிறது

பொன்விழாக் கொண்டாட்டத்தில் சரித்திரம் வாய்ந்த இடங்கள் முக்கியமாக இருக்கலாம்; அபிவிருத்தி திட்டங்கள்-அவை தொழிற்படும் விதங்கள் பார்க்க வேண்டிய விடயங்கள் தான்!

இவையெல்லாம் யாருக்குரியது? மக்களுக்கு குறிப்பாக இன்றைய இளைஞர்களுக்கு; அவர்கள் எங்கிருக்கிறார்கள்?

கொழும்பு காலிமுகத்திடலில் அநுராதபுர புனித நகரில் கண்டி மாநகரில் மட்டும் தான் காணப்படுகின்றனரா?

நாட்டின் பலபகுதிகளிலும் குறிப்பாக கிராமங்களில் வதியும் பொதுமக்கள் மகாராணியின் கருத்தை ஊன்றிக் கவனிக்க வேண்டியவர்கள் இன்று நாம் ஜனநாயக பயணத்தில் எவ்வளவு தூரம் தாண்டிவிட்டோமென்பதையும் அறிய வேண்டியவர்கள் அவர்களே!

இதனைக் கவனத்திற் கொண்டு இன்று இவ்விழா ஒரு ஜனநாயக விழாவாக தேசிய விழாவாக முழுமைபெறுது இக்கருத்தை வலியுறுத்த மகாராணியைத் தூண்டியிருக்கவேண்டுமென்பது எமது எண்ணம்.

## கவிஞர் கண்ணதாசன்

இன்றைய தலைமுறையினரின் சுவைக்கும் மனநிலைக்கும் ஏற்ப கவிதைகளை, குறிப்பாக இசைப் பாடல்களை எழுதியதின் மூலம் கவிஞர் கண்ணதாசன் தமிழர் இல்லங்கள் தோறும் இன்று நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்தப்படும் நிலையைப் பெற்றுக்கொண்டார் என்பதில் சற்றும் தவறில்லை.

மகாகவி பாரதி ஒரு யுகக்கவிஞர் என்றால் அவனுக்குப் பின்னால் வரும் காலத்தில் அவ்வப்போது நிகழும் சமூக, அரசியல், பொருளாதார மாற்றங்களினால் ஏற்படும் திருப்பங்களையொட்டி சிறப்புப் பெறும் கவிஞர்களில் கண்ணதாசன் குறிப்பிடத்தக்கவர் எனலாம்.

பாரதி காலத்தோடும், அதற்குப் பின்னும் தமிழ் நாட்டில் பிரகாசமுற்ற கவிஞர் வரிசையில் நாமக்கல் கவிஞர், தேசிய விநாயகம்பிள்ளை, சுத்தானந்த பாரதி, பாரதிதாசன் போன்றவர்களுக்கடுத்து, தமிழ் நாட்டில் மாத்திரமின்றித் தமிழர் வாழும் நாடுகளில் எல்லாம் பிரபலமடைந்தவர்களில் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், கவிஞர் கண்ணதாசன் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவ்விருவரும் இன்றைய மக்கள் பொழுதுபோக்குச் சாதனமான சினிமாவின் மூலம் பெரும் புகழ் ஈட்டியதுமட்டுமின்றி மக்கள் மத்தியில் பெரும் தாக்கத்தையும் ஏற்படுத்தினார்கள்.

கண்ணதாசன் கவிதை எழுதுவதில் மாத்திரமின்றி உரைநடை ஆக்கங்களிலும் தமது பேனாவை நன்குபயன்படுத்தினார். கண்ணதாசனின் கவிதைத்தொகுதி முதற்பாகம்- தைப்பாவை- சிறுகாவியம் ஆகியனஇவரது கவித்துவத்துக்கும், அர்த்தமுள்ள இந்துமதம்- கட்டுரைத்தொகுதிகள் உரைநடைத்திறத்துக்கும் எடுத்துக்காட்டெனலாம். 'வனவாசம்' என்ற இவரது நூல் எதையும் வெளிப்படையாகச் சொல்லும் கவிஞனின் உளப்பாங்கை வெளிப்படுத்தியது மட்டுமின்றி வேகமான இவரது தமிழ் உரைநடைக்கும் ஒரு உதாரணமாக அமைந்தது.

தமிழ் மீதும் தமிழர் மீதும் தமிழ் நாட்டின் மீதும் அடங்காத பற்றுக்கொண்டிருந்த கவிஞர் இலங்கைத்தமிழர் பிரச்னைகளிலும் மிகுந்த அக்கறை காட்டினார்.

உலகக்கவிஞர் மகாநாட்டில் கலந்து கொள்ளச் சென்ற இடத்தில் அமெரிக்காவில் காலமான அவரது சடலம் தமிழகத்திற்குக் கொண்டுவரப்பட்டு நேற்று முன்தினம் தகனம் செய்யப்பட்டது. பல்வேறுபட்ட மக்களும் சமயத்தவர்களும் தலைவர்களும் ஒன்றுகூடி அஞ்சலி செலுத்தினார்கள்.

அவரது மறைவு தமிழ் நாட்டுக்கு மட்டுமின்றி தமிழ்பேசும் அனைவருக்குமே ஒரு பெரும் இழப்பு.

கவிஞரின் ஆத்ம சாந்திக்காக நாமும் பிரார்த்திப்போம்!

# வதிரியில் ஒரு சமூக பொருளாதார ஆய்வு

சமூக பொருளாதார அபிவிருத்தி முயற்சிகள் பற்றிய பொதுவான நோக்கங்களும் நடவடிக்கைகளும் தற்பொழுது விரிவடைந்து வருகின்றன. அபிவிருத்தி முயற்சிகளை மேல் மட்டத்திலிருந்து நோக்குவதிலும் பார்க்க கிராமமட்டத்திலிருந்து தூண்டுவதும் செயற்படுத்துவதுமே நிரந்தரமான தீர்வினை நல்கும் என்ற கருத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதாம் கிராமங்களைப்பற்றிய சமூக பொருளாதார நிலைமைகளை ஆராய்வது அவசியமாகத்தோன்றி விட்டது. அவற்றுள்ளும் பின்தங்கிய சமூகங்கள் வாழும் கிராமங்களுக்கு முக்கியத்துவம் வழங்கவேண்டும். பின்தங்கிய சமூகத்தவர்கள் சமூக பொருளாதார வசதிகளிற் குன்றியவர்கள் என்று எப்பொழுதும் கூறுவது போன்ற இரவல் கூற்றினை விடுத்து உண்மைநிலை என்ன என்பதைப் புள்ளிவிபரச் சான்றுகளுடன் விஞ்ஞானரீதியாக எடுத்துக்காட்டுவது அவசியமாகி விட்டதால் வதிரி அபிவிருத்தி நிறுவனம் ஒரு முயற்சியில் ஈடுபட்டுத் தம் கிராமத்தில் சமூக பொருளாதார ஆய்வொன்றை வெற்றிகரமாக நிறைவு செய்தமை குறிப்பிடத்தக்கது.

வடமராட்சியில் பின்தங்கிய சமூகங்கள் வாழும் கிராமங்கள் பல உள்ளன இவற்றை முழுத்தொகுதியாகக்கொண்ட பூரண ஆய்வொன்றைச் செய்யவேண்டும் என்ற விரிவான நோக்கம் வதிரி அபிவிருத்தி நிறுவனத்திற்கு ஆரம்பத்தில் ஏற்பட்ட போதும், சில அடிப்படை வசதிகள் அனுகூலமாக இல்லாத காரணத்தால் முன்னோடி ஆய்வாக வதிரியில் நிகழ்த்தப்பட்டது. ஒரு வருடத்துக்கு முன்பு சாவகச்சேரி தொகுதியில் இது போன்ற ஒரு ஆய்வு மிகவும் விரிவாகச்செய்யப்பட்டது. அதனை முன்னின்று நடத்திய யாழ் பல்கலைக்கழகப் புவியியற் பேராசிரியர் டபிள்யூ எல். ஜெயசிங்கம் அவர்களுடைய நெறிப்படுத்தல்களின் கீழேயே வதிரிக்கிராம ஆய்வும் நடந்து முடிந்தது. ஆனால் சாவகச்சேரித்தொகுதியைப் போன்ற 10% மாதிரி ஆய்வைக் கொண்டன்றி முழுமைத் தொகுதியை அடக்கிய [100%] பூரண ஆய்வென்பது குறிப்பிடத்தக்கது. கிராமத்தின் பரப்பும் இலகுவாக அணுகக்கூடிய சூழ்நிலையும் ஒத்துழைப்பும் பேருதவியாக இருந்தன. சனத்தொகை கல்வி தொழில்கள் வருமானம் சுகாதாரம் ஏனைய பதினொரு சமூக வசதிகள் முதலியன ஆய்விற்குரிய விடயங்களாக எடுக்கப்பட்டன. எதிர்காலத்தில் சூழவுள்ள கிராமங்களுக்கும் இதுபோன்ற ஆய்வினை நிகழ்த்துவது நிறுவனத்தின் நோக்கமாகிவிட்டது.

ஏறக்குறைய மூன்றரை ச. மை பரப்புடையது இக்கிராமம் இதன் அமைவிடம் வாழிடவசதிகளால் வரையறுக்கப்பட்டது. பௌதிக வளங்கள் எவ்வகையிலேனும் துணை செய்யாத கிராமம், எல்லாமாக 132 வீடுகளும் 230 குடும்பங்களும் உள்ளன. மொத்தமாகத் 926 மக்கள் வாழ்கின்றனர். ஆண், பெண் தொகையில் ஒரு சம நிலை காணப்படுகிறது. ஆண்கள் 50.4 வீதம் மாகவும் பெண்கள் 49.6 வீதம் உள்ளது வயதடிப்படையில் இளம் வயதினர் பெரும்பான்மையினர் இது 75.2 வீத மாகும் 19 வயதிற்குட்பட்டோர் 32.5 வீதம் 55 வயதிற்கு மேற்பட்டோர் 14 வீத இந்நிலைமைகளை அவதானிக்கும் போது சமூக பொருளாதார நிலைக்குப் பல பிரச்சினைகளைத் தரக்கூடிய அமைப்புத் தென்படுகிறது. சராசரிக் குடும்ப அங்கத்தினர் 4 பேராக இலங்கையின் சராசரிக்கு முரண்படாதுள்ளது.

சமூக முன்னேற்றத்திற்கு வழிகோலுகின்ற கிராமத்தின் கல்விநிலை குறிப்பிடத்தக்கது. பொது நோக்கிற் பார்க்கப்படும் எழுதவாசிக்கத் தெரிந்த கல்வியறிவு என்ற கருத்தில் கிராமக் கல்விமட்டம் மிகவுயர்வாகத் தோன்றுகின்றது. ஆனால் பயன்பாடுடைய கல்வியாயின் முற்கூறியதற்கு முரணான தன்மையேயுண்டு என்பதைப் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. இன்றைய நிலையில் 8-ம் வகுப்புவரையான கல்வியைச் சிறப்பு மட்டக் கல்வியாக எடுத்துக் கொள்ளல் பொருந்தாது. 69.5 வீதம் மாணவர்கள் இவ்வளவு வரையிலேயே கற்கமுடிந்துள்ளது. க.பொ.த சாதாரணதரம் 19.8 வீதமும் உயர்தரமும் அதற்கு மேலும் 8.5 வீதமாகவும் காணப்படுகின்றது. கிராமக் கல்விமட்டம் மேம்படாமைக்கும் பல காரணங்கள் அடிப்படையாக அமைந்துவிட்டன. முன்னைய

**மா. கருணாநிதி**

தசாப்த காலப்பகுதியில் கல்வியைத் தொடர்வதற்குச் சமூக ரீதியான தடைகளும், வரையறுக்கப்பட்ட கல்வி நிலையங்களும் அவற்றுள் முக்கியமானவை, பல இன்னல்களின் மத்தியில் கல்வியைத் தொடர்வதற்குக் குடும்பநிலை வருமானம் முதலியன தடுத்துவிட்டன. ஆண், பெண் என்ற ரீதியில் க.பொ.த. சாதாரணதரம்வரை கற்றவர்களித்

(6-ம் பக்கம் பார்க்க)

# எவரையும் நோகாமல் எழுதும் பண்பினர்

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் ஒரு ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ''ஈழநாடு'' பத்திரிகையின் ஸ்தாபகர்களில் ஒருவரான டாக்டர் சண்முகரத்தினம் புன்முறுவல் பூத்த முகத்துடன் கூடிய இன்னொருவருடன் கொழும்பிலுள்ள எனது இல்லத்துக்கு வருகைதந்து சில ''ஈழநாடு'' வாரபத்திரிகைகளை கையளித்தனர். அந்த 'இன்னொருவர்தான்' இப்பத்திரிகையின் புதிய நிர்வாக ஆசிரியர் என்று அறிமுகஞ் செய்தும் வைத்தார். டாக்டர் அதன் பின் ஹரன் ஐயாவை கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் பலமுறை சந்தித்து அளவளாவியிருக்கிறேன் சற்றும் பெருமை யற்றபோக்கும் இனிய வார்த்தைகளும் எதிலும் பற்றற்ற பரந்த நோக்கும் பண்பான நடத்தையும் அவருடன் நெருங்கிப்பழகியவர்களை கவர்ந்து வியப்பிலாழ்த்தின. இறைவா யாவும் உன்செயல் என்பதே ஹரன் ஐயாவின் திருமந்திரம் ஏதாவது நற்செய்தியை கேள்விப்பட்டால் 'பேஷ்' 'பேஷ்' என்று உற்சாகப்பட்டு மகிழ்வார்.

எவ்விதமான இன்னல்கள் வந்தபோதிலும் மனம் கலங்கமாட்டார். தங்க விக்கிரகம் போன்ற ஒரே ஒரு மகனை தனது சொந்த மருமகனுக்கு திருமணம் முடித்த அடுத்த ஆண்டிலேயே பறி கொடுத்த போதிலும் ''இறைவன் கொடுத்தான்'' ''எடுத்துக் கொண்டான்'' என்றார்.

1963-ம் ஆண்டு நான் அரசாங்க சேவையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்தபின் எங்கள் இருவரது நெருக்கமும் அதிகமாயிற்று. எனது இல்லத்துக்கு அடுத்த இல்லத்தில் இவர் வசித்தபடியால் நாள் தோறும் இவரைச் சந்தித்து பேசி மகிழும் வாய்ப்புஎனக்குக் கிட்டியது. பத்து ஆண்டுகளுக்கு மேலாக எங்கள் மத்தியில் வாழ்ந்து எங்கள் குடும்பத்தில் ஒருவராக இருந்தார். எங்கள் இன்ப துன்பங்களில் பங்குபற்றி உற்றதுணையாக இருந்த ஹரன் ஐயா சென்ற சில ஆண்டுகளாக எங்கள் மத்தியில் இல்லாதது அவருடன் பழகியவர்க்கும் ஒரு பேரிழப்பு. எந்த அதிர்ச்சிக்கும் கலங்காத ஹரன் ஐயா அவர்கள் 1966-ம் ஆண்டு டாக்டர் கே. சி. சண்முகரத்தினத்தின் மறைவை ஒட்டிய செய்தியை தொலைபேசி மூலம் கேட்டதும் அலறி மயங்கிவிட்டார். அந்த டாக்டர் அவர்களிடம் ஹரன் ஐயாவுக்கு இருந்த அன்பும் நம்பிக்கையும் மதிப்புமே இதற்கு காரணம்.

'ஈழநாட்டு' பத்திரிகையில் படித்தவுடன் யாவரும் முதலில் தேடுவது 'ஐயாறன் எழுதுவது' என்ற பகுதி. இந்தப் பகுதியில் வந்த விடயங்கள் பல. அரசியல், சமயம், சமூகத் தொல்லைகள் மற்றும் பொதுப் பிரச்னைகள் பலவற்றை மையமாக வைத்து உபகதை போல் ஆணித்தரமாக 'ஐயாறன்' பகுதியில் எழுதிவிடுவார். யாவரையும் அதிகம் போற்றவுமாட்டார், தூற்றவுமாட்டார். யாவற்றையும் ஒரு பகிடிபோல் எழுதி வாசிப்பவர்களின் மனதைக் கவர்ந்துவிடுவார்.

ஒரு நாள் இவரை ஐயாறன் யார் என்று கேட்டேன். விளக்கினார்-தாங்கள் தெலுங்குப் பிராமணர்களாக இருந்த போதிலும் பல தலைமுறைகளாக திருவையாறில் வாழ்ந்து வருவதினால் திருவையாறு அப்பன் நினைவாக 'ஐயாறன்' என்ற பெயரில் அந்தப் பகுதியை எழுதிவருவதாகச் சொன்னார்.

1962-ம் ஆண்டு சில தெள

(6-ம் பக்கம் பார்க்க)

**செ- இரத்தினசபாபதி**

## அரன் என்னும் ஐயாவே!

ஐயாறெனும்பகுதி அன்றீழ
நாட்டிலே அலங்கரித்த
கையாலே பற்பலநல் வாழ்ந்தகருத்
துக்களைப் பதித்துவிட்ட
ஐயாவே அரனென்னு மாசிரியப்
பெருந்தகையே அறிஞரேறே
நையாமல் நைகின்றோம் நின்பிரிவால்
இதனை நவில்வாமோ?

— வை. க. சிற்றம்பலம்

# கண்ணதாசன் நினைவாக

## காரைக்குடியில் மணிமண்டபம்

### எம். ஜி. ஆர். அறிவிப்பு
### இறுதிச்சடங்கில் அமைச்சர் 'இராசு'

சென்னை, அக். 23

கவிஞர் கண்ணதாசனின் நினைவாக காரைக்குடியில் மணிமண்டபம் ஒன்று அமைக்கப்படும். இந்த மணி மண்டபம் அரசின் ஆதரவுடனும் எதிர்க்கட்சிகள் பொதுமக்களின் ஆதரவுடனும் நிறுவப்படும்.

இத்தகவலை தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் நேற்று சென்னையில் நடைபெற்ற கவிஞர் கண்ணதாசனின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு பேசுகையில் கூறினார்.

திரு. இராமச்சந்திரன், முன்னாள் தி. மு. க. அமைச்சர் திரு. அன்பில் தர்மலிங்கம், தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு எம். பி. சுப்பிரமணியம், இலங்கை பிரதேச அபிவிருத்தி இந்துகலாசார அமைச்சர் திரு. செ. இராசதுரை உட்பட கவிஞர்களும் பெருந்திரளான மக்களும் கவிஞர் கண்ணதாசனின் தகனக் கிரியைகளில் கலந்து கொண்டனர்.

கண்ணதாசனின் மகன் கண்மணி பாபு கவிஞரின் சிதைக்குத் தீமூட்டினார்.

கவிஞரின் மரண ஊர்வலம் நான்கு கிலோமீட்டர் தூரத்தைக் கடக்க 2 மணிநேரம் பிடித்தது என அறிவிக்கப்பட்டது. ஊர்வலம் சென்ற வீதியின் இருமருங்கிலும் அங்குள்ள மரங்கள், மாடிக்கட்டிடங்களிலும் பெருந்திரளான மக்கள் கூடிநின்று கவிஞருக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர். (இ)

### சீன - இந்திய பிரதமர்கள் சந்திப்பு

கான்குன், அக். 23

செல்வந்த — வறிய நாடுகளுக்கிடையிலான இரண்டு நாடுகளுக்கான உச்சி மகாநாட்டில் கலந்து கொள்வதற்கு மெக்ஸிக்கோ வந்துள்ள இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியும் சீனப் பிரதமர் திரு ஷாவோ ஷியாங்கும் நேற்று சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

இருநாட்டு விவகாரங்கள் குறித்தும் சர்வதேச விவகாரங்கள் குறித்தும் இருவரும் பேச்சு நடத்தினர். (இ)

### வறிய நாடுகளுடன் பேச்சுநடத்த அமெரிக்கா தயாராக இருக்கிறது

#### மெக்ஸிக்கோ மகாநாட்டில் றீகன்

கான்குன், அக் 23

வறியநாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்த அமெரிக்கா தயாராக இருக்கிறது என்று அமெரிக்க அதிபர் திரு. றொனால்ட் றீகன் தெரிவித்துள்ளார்.

மெக்ஸிக்கோவில் நேற்று ஆரம்பமான செல்வந்த - வறிய நாடுகளுக்கிடையிலான உச்சிமகாநாட்டில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

22 நாடுகள் கலந்துகொண்ட இம்மகாநாட்டில் திரு. றீகன் மேலும் பேசுகையில் கூறியதாவது;

ஏழை நாடுகளுக்கு உதவி அளித்துவரும் உலக ஏஜன்ஸிகளில் மாறுதல் செய்யக்கூடாது. உலக நாடுகளுக்கு உதவ புதிய ஏஜன்ஸிகள் நிறுவக்கூடாது. இந்த நிபந்தனைகள் ஏற்றுக் கொண்டால் மட்டுமே அமெரிக்கா வறியநாடுகளுடன் பேச்சு நடத்தும் என்றும் திரு. றீகன் கூறினார்.

#### தட்சர் கூற்று

சர்வதேச வளர்ச்சி பொருளாதார அடிப்படையில் இருக்க வேண்டும் என்று இம்மகாநாட்டில் பேசிய பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கிரெட் தட்சர் கூறினார்.

வறிய நாடுகளை முன்னேற்றுவதற்கு உலகம் தழுவிய விதத்தில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட வேண்டும் என்று சீனப்பிரதமர் திரு. ஷாவோ ஷியாங் தெரிவித்தார்.

### ரூ. 10 லட்சம் கடத்தல் பொருட்கள் மீட்பு

சென்னை, அக். 23

தென்னாற்காட்டில் வீதியால் சென்றுகொண்டிருந்த லொறி ஒன்றிலிருந்து 10 லட்சம் ரூபா பெறுமதியான கடத்தல் பொருட்களை பொலிசார் கைப்பற்றினர்.

மணலுக்கடியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த கசட் றெக்கோடர்கள், கல்குலேட்டர்கள் ஆகியவற்றையே பொலிசார் மீட்டனர். (இ)

### உலக சமஸ்கிருத மகாநாடு

வாரணாசி, அக். 22

ஐந்தாவது உலக சமஸ்கிருத மகாநாடு நேற்று வாரணாசியில் ஆரம்பமானது.

இம் மகாநாட்டை உத்தரப் பிரதேச முதலமைச்சர் திரு. விஸ்வநாத் பிரதாப்சிங் ஆரம்பித்து வைத்தார்.

சுமார் 1200 பிரதிநிதிகள் கலந்துகொள்ளும் இம் மகாநாட்டில் தெரிவு செய்யப்படும் நூலொன்றிற்கு ஒரு லட்சம் ரூபா பரிசளிக்கப் போவதாக உத்தரப்பிரதேச முதலமைச்சர் திரு. விஸ்வநாத் பிரதாப்சிங் தெரிவித்துள்ளார். (வே)

### சமய வகுப்பு

(வேலணை)

வேலணை வங்களாவடி முருகன் ஆலயத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமைகள் தோறும் காலை முதல் நண்பகல் வரை சித்தாந்த கலாநிதி க. கணபதிப்பிள்ளையினால் "சிவஞான போதசுழிபாடு" என்னும் பொருள்பற்றி சமய வகுப்பொன்று இலவசமாக நடத்தப்பட்டு வருகின்றது.

### தொழிற்பயிற்சி

(துணுக்காய்)

மல்லாவி, யோகபுரம், துணுக்காய் பகுதிகளில் வதியும் பாடசாலையை விட்டு விலகியவர்களுக்கும், வேலையற்று இருப்போருக்கும் நெசவு வேலை, தச்சுவேலை பயிற்சி அளிக்கப்பட இருக்கின்றது. அரசாங்கத்தின் உதவியுடனும் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் உதவியுடனும் இப் பயிற்சி அளிக்கப்படும். (கு)


### லொன்றியில் திருட்டு

(உடுப்பிட்டி)

பூட்டப்பட்டிருந்த லொன்றி ஒன்று இரவுவேளை உடைக்கப்பட்டு அங்கிருந்த 5,000 ரூபா பெறுமதியான உடுதுணிகள் களவாடப்பட்டுள்ளன.

வல்வெட்டித் தபால் கந்தோருக்கு அருகாமையிலுள்ள லொன்றியிலேயே இத் திருட்டு நடந்துள்ளது.

இத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக பருத்தித்துறைப் பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (இ)

சைக்கிள் ஓடும்போதே சங்கீதம்

ஆர்ச்சர்

பைசிகிள் ரேடியோ


சைக்கிளில் இன்றியும் இயங்கும்.

3 பாட்டரிகள் இலவசம்.

உங்கள் நீண்ட தூர பைசிகிள் பிரயாணத்தை அனுபவியுங்கள். இந்த அதி நுட்ப சாதனத்தில் சத்தமிடும் கருவி அமைப்போடு பாதுகாப்பான எதிரொலியும் உண்டு உங்கள் பைசிகிள் ஹன்டல் பாரில் இணைத்து விடுங்கள்.

ஆர்ச்சர் பைசிகிள் ரேடியோ மோப்பெட்களிலும் பாவிக்கலாம். சைக்கிளிலிருந்து அப்புறப்படுத்தி வீட்டினுள்ளும் பாவிக்கலாம்

எல்லா நல்ல வியாபாரிகளிடமும் கிடைக்கும்




விலை. ரூ. 350/-

இணைப்போர்:
ஓர் ஒலியோனிக்ஸ் லிமிட்டட் இணைப்பு.

ஓர் பார்லட் குரூப் அங்கத்தவர்.

விற்பனையாளர்.
யுனிவர்ஸல் மார்கட்டிங் சர்விஸஸ்
158, கன்டி ரோட், ஹெந்தல.
தொலைபேசி070 - 427/520

SRI COMMUNICATION

### வெளிநாட்டில் வேலைவாய்ப்பு மோசடி:

# பிணையில் விடப்பட்டவர் வெளிநாடு சென்றாராம்

## நீதிபதி வாரண்ட் பிறப்பித்தார்

(மாவிட்டபுரம்)

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடி குறித்துக் கைதாகி பிணையில் விடப்பட்ட நபர் ஒருவர் மீது மல்லாகம் நீதிமன்றம் பிடிவிருந்து பிறப்பித்துள்ளது.

வசாவிளானைச் சேர்ந்த வைரவப்பிள்ளை ஆறுமுகம், இராமலிங்கம் கனகலிங்கம், நவரத்தினம் குமாரசாமி ஆகிய மூவரிடம் வெளிநாட்டில் வேலைவாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி முதலாவது நபரிடம் 20 ஆயிரம் ரூபாவையும், ஏனைய நபர்களிடம் தலா 15 ஆயிரம் ரூபாவையும் பெற்று மோசடி செய்ததாக வல்வெட்டித்துறை முருகையன் கோவிலடியைச் சேர்ந்த கே. மகேந்திரன் என்பவர் மீது யாழ். விசேட குற்றத் தடுப்புப் பிரிவினர் வழக்கொன்றைத் தொடர்ந்திருந்தனர்.

மல்லாகம் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட இவ்வழக்குக் காரணமாக மேற்படி நபர் கைதாகி நீமாண்டில் வைக்கப்பட்ட பின்னர் 15 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இவ்வழக்கு மீண்டும் மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணைக்கெடுக்கப்பட்ட சமயம் எதிரி நீதிமன்றத்துக்கு வராமையால் இதுபற்றி பதில் நீதிபதி திரு. கே குணரத்தினம் வினவினார்.

வழக்காளிகள் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி அ. குமரகுரு, மேற்படி எதிரி பிணையில் விடப்பட்டபின் பல தடவை இவ்வழக்கு விசாரணைக்கெடுக்கப்பட்டபோதும் அவர் சமூகமளிக்கவில்லையென்றும், அவர் வெளிநாட்டுக்கு தப்பியோடிவிட்டதாகத் தெரியவருவதாகவும், இன்று வழக்கையே விசாரணை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

பதில் நீதிபதி திரு.கே. குணரத்தினம் எதிரிக்கு பிடிவிருந்து பிறப்பித்து விசாரணையை ஒத்திவைத்தார். (இ)

## வான் மோதி ஒருவர் மரணம்

(சண்டிக்குளி)

தனது மகனையும் கையில் பிடித்துக்கொண்டு வீதி அருகில் சிலருடன் கதைத்துக் கொண்டிருந்தவர் திடீரென வேகமாய் வந்த வானினால் மோதுண்டு மரணமானார்.

இவ்வாறு பரிதாபகரமாக மரணமானவர் பஷையூர் சென் அன்ரனிஸ் வீதியை அவ்விடத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி திருத்துவதாஸ் (வயது 31) என்பவராவர்.

### ஆயுள்வேத...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களின் சார்பில் கேட்டுக்கொள்கின்றோம். அரசாங்கம் ஆயுர்வேத வைத்தியத்துறையை அபிவிருத்தி செய்ய எவ்வளவோ நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ஆனால் தமிழ் மக்களது பாரம்பரிய சித்த வைத்தியக் கலையை அபிவிருத்தி செய்ய இதுவரை எவரும் எதுவித நடவடிக்கைகளை எடுத்ததாகத் தெரியவில்லை. தமிழரது அரிய இவ்வைத்தியக் கலையை அபிவிருத்தி செய்ய ஏற்ற நடவடிக்கை எடுக்குமாறு அபிவிருத்தி சபையைக் கேட்டுக்கொள்கிறேன். (கி)

### மக்களின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கிளிநொச்சியில் இடம்பெற்ற களவு சம்பந்தமான தகவல்கள் உடனடியாகக் கோரப்படுகின்றன. பொலிஸ் இராணுவ ஜீப் வாகனங்கள் அல்லாத வேறு எந்த ஜீப் வாகனமாவது அப்பகுதியில் சமசியமான முறையில் உலாவி இருந்தால் அல்லது சந்தேகமான முறையில எவராவது நடமாடியிருப்பின் அல்லது நகை முதலானவற்றை எவராவது சந்தேகமான முறையில் விற்பதற்கோ இன்றேல் பொறுக்கி வைப்பதற்கோ முயன்றால் அல்லது குற்றவாளிகளைக் கைது செய்யக்கூடிய தகவல்கள் ஏதாவது கிடைத்தால் உடனடியாக அண்மையில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கோ அல்லது கிராம சேவகர் மூலமாகவோ, சிரேஷ்ட அரசாங்க உத்தியோகத்தர் மூலமாகவோ பொலிசுக்குத் தகவல் கொடுக்கலாம். தகவல் கொடுப்பவரின் விபரம் வெளியிடப்படமாட்டாது.

குற்றம் செய்பவர்களைத் தம் சூழலிலிருந்து அகற்றுவதன் மூலம் யாழ்ப்பாண மாவட்ட மக்களே நன்மையடைவர். அவர்களின் ஒத்துழைப்பை நான் நாடுகின்றேன். (மா)

### வதிரியில்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பெண்களின் பங்கு அதிகமாக அமைந்துள்ள போக்கு காணப்படுகிறது இது ஆண்கள் கல்வியைத் தொடர்வதற்கு இருந்த கட்டுப்பாடுகளுக்குத் தகுந்த சான்றாகும். குடும்பங்களை வழிநடத்தும் பொறுப்புச் சிறுவயதிலேயே இவர்களுக்கு அளிக்கப்பட்டு விடுவதால், வேலை தேடவேண்டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்படுவதால் கல்வித்தரம் உயரவாய்ப்பு உருவாகவில்லை. கிராமத்தில் அமைந்துள்ள ஒரு மகாவித்தியாலயத்திலும் ஆரம்பப்பாடசாலையிலும் கல்வியை முடித்து, மேற்படிப்பைத் தொடர வேற்றுப் பாடசாலைகளை நாடுவதில் பல கஷ்டங்கள் தோன்றின. உயர் கல்வியையும் பெற்று, ஒரு சிலருக்குக்கூடத் தகுந்த வேலை வசதிகள், உயர் பதவிகள் கிடைக்கும் வாய்ப்பின்மையால் தம்பின் வருவோருக்குச் சரியான பாதையைக் காட்ட முடியவில்லை சாதாரண தரத்தினை முடித்த சிறுதொகையினருக்கும் வேலைவாய்ப்புக்கள் கிடைக்கவில்லை. (மிகுதி நாளை)

# கிளிநொச்சியில் தாக்குதல்

## பொதுமக்கள் புகார்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மக்கள் வங்கிக் கொள்ளையை அடுத்து கிளிநொச்சியில் பொதுமக்களையும் லொறிகள் தனியார் வாகனங்களையும் இராணுவத்தினர் தாக்கிவருகின்றனர் என பொலிசிலும் யாழ் அரசாங்க அதிபரிடமும் புகார்செய்யப்பட்டுள்ளது.

கடைகள் யாவும் மூடப்பட்டுள்ளன. கடைகளிலுள்ள பொருட்கள் லொறிகள்மூலம் அப்புறப்படுத்தப் படுகின்றன. மக்கள் நடமாட்டம் மிகவும் குறைந்து காணப்படுகின்றது.

இராணுவத்தாக்குதல் சம்பவம் குறித்து பொதுமக்கள் பொலிசாருக்கும் எம். பி.க்கும் புகாரசெய்ததை அடுத்து எம்.பி. யாழ். அரசாங்க அதிபருடன் தொடர்புகொண்டுள்ளார்.

### எம். பி. வேண்டுகோள்

இதேசமயம், பொதுமக்களை அமைதியாக இருக்குமாறும் வீதிகளில் நடமாட்டத்தைக் குறைக்குமாறும் கிளிநொச்சி எம். பி திரு. வி ஆனந்தசங்கரி வேண்டுகோள் விடுத்துள்ளார் இதுபோன்ற கொள்ளைச் சம்பவம் கிளிநொச்சியில நடைபெறவில்லை என்றும் இச்சம்பவம் குறித்து தாம் கவலைப்படுவதாகவும் தெரிவித்த எம்.பி. பொது மக்களை பொலிசாருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார் (இ)

### எவரையும்,..

(3ம் பக்கத் தொடர்ச்சி)

னித்திய ஸ்தலங்களுக்குக் குடும்பத்தோடு யாத்திரை செய்து திரும்பினேன். யாத்திரையால் நான் திரும்பியதும் ஹரன் ஐயா அவர்கள் எனது யாத்திரையைப் பற்றி கேட்டார் - சொன்னேன். அடுத்த நாள் 10-5-62 வெளியீடான 'ஈழநாடு' பத்திரிகையில் "ஐயாறன் எழுதுவது" என்னும் பந்தியில் நான் சொன்னவற்றை எல்லாம் தனது குறிப்புரைகளுடன் விரிவாக எழுதிவிட்டார். நான் அவரைச் சந்தித்து 'ஐயா' உங்களோடு பேசுவதே ஆபத்தென்று சொன்னேன். அவர் சிரித்த முகத்துடன் 'உண்மையைத்தானே எழுதினேன் என்று சொல்லி சமாதானப்படுத்திவிட்டார்.'

### நவம்பர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவங்களை விசாரித்து, நஷ்டஈடு வழங்குவதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட திரு. வயனல்பெர்னாண்டோ தலைமையிலான விசாரணைக்குழு யாழ்ப்பாணக் கச்சேரியில் நேற்றுக்காலை 9மணிக்கு தனது விசாரணையை ஆரம்பித்தது. விசாரணைக்குழுவின் ஏனைய இரு அங்கத்தவர்களான திரு. சிட்னி டி. சொய்சா, திரு. ம. நடராசா ஆகியோரும் விசாரணையில் சமுகமளித்திருந்தனர். நிலைமைகள் பற்றிக் குழுவினர் ஆராய்ந்தனர்.

நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல்வரை 234 விண்ணப்பப்படிவங்கள், சம்பவத்தில் சேதமடைந்தோரால் யாழ். நஷ்டஈட்டு விசாரணைக்குழு அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டன. மொத்தம் 53 விண்ணப்பப் படிவங்கள் பூரணப்படுத்தப்பட்டு இவ் அலுவலகத்தில் கையளிக்கப்பட்டுள்ளன. முதற்கட்ட விசாரணை நேற்று ஆரம்பித்தது (மக)

### கணவனும்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிட்டதும் மனைவி வெளியில்வர முதலாளியுடன் தாம் தனிமையாகக் கதைக்க வேண்டும் என்று கூறி அவரை அறையில் இருந்து வெளியே அழைத்தனர் என்றும் கூறப்படுகிறது.


## காரைநகர் சிவாச்சிரமம்

### 21-வது ஆண்டு நிறைவு விழா

நிகழும் துர்மதி ஆண்டு ஐப்பசித் திங்கள் 9-ம் நாள் (25-10-81) ஞாயிறு 9-00 மணிக்கு சிவாச்சிரம மண்டபத்தில் முன்னாள் வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திருமதி இரத்தின நவரத்தினம் M A. அவர்களின் தலைமையில் ஆரம்பமாகும்.

அடியார்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப் படுகின்றனர்.

1294

## ஹோம் பினான்ஸ் லிமிட்டெட் ஆரம்பித்திருக்கும்

# உல்லாச பஸ் சேவை

யாழ்ப்பாணம் - கொழும்பு - யாழ்ப்பாணம்

கண்ணியமான, பாதுகாப்பான பஸ்சேவை

### யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படுதல்:

செவ்வாய், வியாழன், ஞாயிற்றுக்கிழமைகளில

### கொழும்பிலிருந்து புறப்படுதல்:

திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில்

யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுமிடங்கள்:

(1) ஹோம் பினான்ஸ லிமிட்.
இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: இல: 8310

(2) யாழ். மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: இல: 7596.

கொழும்பில் டிக்கட் பெறும் இடங்கள்

ஹோம் பினான்ஸ் லிமிட்டெட்
463, காலி வீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190.

ரவிந்திரா ஸ்டோர்ஸ்
285, காலி வீதி, வெள்ளவத்தை.

J. M. S. மிராண்டாஸ்
109, ஓல்கொட் மாவத்தை, புறக்கோட்டை.

நியூ புஷ்பா ஸ்டோர்
127, காலி வீதி, பம்பலப்பிட்டி
தொலைபேசி இல: 88866

கட்டணம் ரூபா 65-00

# கேள்வி அறிவித்தல்

## யாழ். அபிவிருத்திச் சபை

### நெல்லியடி உப அலுவலகம்

நெல்லியடிச்சந்தையில் 4-ம் இலக்க மாட்டிறைச்சிக்கடையில் 1-11-81 தொடக்கம் 31-12-81 வரையில்

கட்டுப்பாட்டு விலையில் மாட்டிறைச்சி விற்பனை

செய்வதற்கான உரிமம் வழங்குவதற்குரிய கேள்விகள் நெல்லியடி உப அலுவலக குறித்துரைக்கப்பட்ட உத்தியோகத்தரால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் ரூபா 300/ பிணைப்பணமாகவும் ரூபா 25/- கேள்விப்பத்திரப் பணமாகவும் செலுத்துவதன் பேரில் 29-10-81 3 00 மணி வரையும் நெல்லியடி உப அலுவலகத்தில் வழங்கப்படும். கேள்விப்பத்திரமான ரூபா 25/- மீளப்பெற முடியாததாகும். கேள்விகள் அரக்குமுத்திரையிட்டு

குறித்துரைக்கப்பட்ட உத்தியோகத்தர், யாழ். அபிவிருத்திச் சபை, நெல்லியடி உப அலுவலகத்தின்

விலாசமிட்டு 30-10-81 பிற்பகல் 12-00 மணிக்குப் பிந்தாது கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிட்டிருத்தல் வேண்டும். இறுதித் திகதியின் பின்னர் கிடைக்கும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேலதிக விபரங்களை நெல்லியடி உப அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்,

தேவநேசன் நேசையா,
செயலாளர்,
யாழ். அபிவிருத்திச் சபை,

அபிவிருத்திச் செயலகம்,
யாழ்ப்பாணம்,
23-10-81.

(1293)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சினன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 803-ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில 1981 ம் ஆண்டு அக்டோபர் 24-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper, The General P. O. Sri Lanka Regd.Q. B. 100236/81, P. O. Box 49. Jaffna, தொலைபேசி 7707, 389. 8126,